OPEN ACCESS

Manuscript ID:
TAM-11012026-11251

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.04.2026

Accepted: 25.05.2026

Published: 01.07.2026

Citation:
Jancy Rani, G., & Amala Karthika, G. (2026). The Life of Women in the Kurinji Landscape. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 23–32.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11251

*Corresponding Author:
jancy_res@maher.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

The Life of Women in the Kurinji Landscape

G. Jancy Rani
Full-Time Tamil Research Scholar
Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research
Chennai, Tamilnadu, India
https://orcid.org/0009-0003-4380-7621

G. Amala Karthiga
Associate Professor of Tamil
Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research
Chennai, Tamilnadu, India
https://orcid.org/0000-0002-2746-3035

Abstract

The term Kurinji occupies an important place in Sangam literature. Lexicons (Nikandus) also make reference to the term Kurinji. Mountains — and the continuous mountainous terrain formed by a succession of hills — were referred to as Kurinji land. Mountains and mountain-adjoining regions are designated as Kurinjithinai, representing the primary theme (mudhal porul) associated with this landscape. In the Kurinji land, women lived within a hierarchical structure comprising the mother, foster-mother (chevili-thai), the heroine (thalaivi), her companion (thozhi), the courtesan (parathai), the dancer (virali), daughters of hill-dwellers (varaiyar magalir), hill women (kodichiyar), the Kuratti (hill tribeswoman), and women of the bardic/wandering minstrel community (agavan magalir). Female voices predominate in the poems of the Kurinji genre. The primacy accorded to womanhood reflects a worldview centred upon the woman herself. The heroines of the Kurinji land extended their love and devotion to their male partners and those connected to them, both during the phase of clandestine love (kalavu) and within married life (karpu). In her married life, the Kurinji heroine led a shared, companionate existence. The Kurinji poems contain no distinct voice or role assigned to the mother; the mother appears specifically in contexts concerning the "declaration of virtue" (aRathodu nirthal). Beyond describing the natural beauty of the Kurinji landscape, the primary purpose of these poems is to persuade the hero (thalaivan) to marry the Kurinji heroine. This article seeks to elucidate the life of women in the Kurinji land, along with the associated social contexts and markers of lived experience.

Keywords: *Sangam Literature, Thinai Theory, Kurinjithinai, Literary Criticism, Status of Women, Akathinai, Kurunthogai, Natrinai.*

References

1. S.V. Subramanian (Ed. & Trans.), Sangam Ilakkiyam Moolam Muzhuvathum (The Complete Original Text of Sangam Literature), Manivasagar Padhippagam, Chennai, First Edition, 2006.

2. Parimelazhagar (Ed. & Trans.), Thirukkural, Sarada Padhippagam, Chennai, First Edition.
3. Srinivasan, Ra., Purananuru Seyyalum Seidhigalum (Purananuru: Verses and Reports), Aniyagam Padhippagam, Chennai, First Edition, 2000.
4. Thirugnanasambandam, Sa., Tholkappiyam Porulathikaram, Kathir Padhippagam, Chennai, First Edition.
5. Auvai S. Duraisamy Pillai, Natrinai, Sarada Padhippagam, Chennai, First Edition, 2003.

குறிஞ்சி நிலத்துப் பெண்களின் வாழ்வியல்

க. ஜான்சி ராணி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப்பல்கலைக் கழகம், சென்னை

க. அமலா கார்த்திகா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப்பல்கலைக் கழகம், சென்னை

ஆய்வுச்சுருக்கம்
சங்க இலக்கியத்தில் குறிஞ்சி என்னும் சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது. நிகண்டுகளில் குறிஞ்சி என்னும் சொல்லாட்சி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மலை, பல மலைகள் அடுக்கடுக்காக உடைய தொடர்ச்சியான மலை நிலத்தையும் குறிஞ்சி என்றே அழைத்தனர். மலையும் மலை சார்ந்த இடங்களும் குறிஞ்சி என முதற்பொருள் இடத்தில் குறிஞ்சித்திணை சுட்டப்படுகிறது. குறிஞ்சி நிலத்தில் நற்றாய், செவிலித்தாய், தலைவி, தோழி, பரத்தை, விறலி, வரையர் மகளிர், கொடிச்சியர், குறத்தி அகவன் மகளிர் என்ற படிநிலையில் பெண்கள் வாழ்ந்துள்ளனர். குறிஞ்சித் திணைப் பாடல்களில் பெண் கூற்றுகளே அதிகம். பெண்மைக்கு, முதலிடம் அளித்திருந்தமை பெண்ணைச் சுட்டியே உலகம் இருந்துள்ளது. குறிஞ்சி நிலத்தலைவியர் களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் ஆடவனுக்கும் அவனைச் சார்ந்தவருக்கும் அன்பினையே அளித்துள்ளனர். கற்பில் குறிஞ்சித் தலைவி கூட்டு வாழ்வை நடத்தியுள்ளாள். குறிஞ்சிப்பாடலில் நற்றாய்க்கெனக் கூற்று கிடையாது. நற்றாய் அறத்தொடு நிற்றலில் இடம்பெறுகிறாள். குறிஞ்சி நிலத்தின் இயற்கை அழகை வருணிப்பதோடு குறிஞ்சி நிலத்தலைவியைத் திருமணம் புரிந்துகொள்ளுமாறு, தலைவனை வற்புறுத்திக் கூறுவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது. குறிஞ்சி நிலப் பெண்களின் வாழ்வியலும் அவற்றை குறித்த சமூகச் சூழல்களையும், வாழ்வியல் அடையாளங்களையும் எடுத்துரைக்கிறது இக்கட்டுரை.

முக்கியச் சொற்கள்: *சங்க இலக்கியம், திணைக்கோட்பாடு, குறிஞ்சித்திணை, திறனாய்வு, மகளிர் நிலை, அகத்திணை, குறுந்தொகை, நற்றிணை.*

முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்க காலத்தில் 41 பெண்கள் கவிதை எழுதியுள்ளனர் என்பது அன்றைய சமூகத்தில் பெண்கள்வகித்த செல்வாக்கானநிலையைக் காட்டுகிறது. அதற்குப் பின்னர் கி.பி ஏழாம் நூற்றாண்டு காரைக்கால் அம்மையாரும், கிபி.9 ஆம் நூற்றாண்டுகளும் கவித்துவ செழுமையுடன் வெளிப்பட்டனர். அதன் பிறகு தமிழில் பெண் கவிதை மரபின் தொடர்ச்சியைக் காண இயலவில்லை. சமூகத்தில் பெண்ணின் இருப்பு குடும்ப நிறுவனத்துக்குள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. நிலத்தைக் கைப்பற்றி

ஆள்வதற்காக ஆண்களுக்கிடையில் தொடர்ச்சியாக நடைபெற்ற போர்களின் காரணமாகப் பெண்கள் பொது வெளியில் செயல்படுவதற்கான சமூக நிலைமை இல்லை. ஆணின் துய்ப்பு நிலமாகப் பெண்ணுடல் முழுக்க மாற்றப்பட்ட சூழல் வலுவடைந்தபோது பெண் கவிதை வெளி என்பது சாத்தியமற்றுப் போனது. சங்க காலத்தில்தனிக்குடும்பஅமைப்புவழக்கினில் இருந்தது. இனக்குழு வாழ்க்கைச் சூழலில் ஒருவரையொருவர்விரும்பியஇளைஞனும் இளைஞியும் களவு வாழ்வு மேற்கொள்வதை இயல்பானதாகச் சமூகம் அங்கீகரித்தது. பெண் மீது சந்தேகப்படும் ஆண் பற்றிய பதிவுகள் இல்லை. இனக் குழுவுக்கு வெளியே இருந்து வருகிற ஆணின் காதலைப் பெண் ஏற்றுக்கொள்ளும் வகையில் அகப்பாடல்கள் உள்ளன. இயற்கையாக வளர்ந்த மரத்தை உடன் பிறப்பாகக் கருதும் மனநிலை பெண்ணுக்கு வாய்த்திருந்தது. தாய் வழிச் சமூக அமைப்பின் எச்சமாக தன்னிச்சையுடன் செயல்பட்ட பெண்ணின் பாலியல் வேட்கையைச் சுருக்கிக் குடும்பம் என்று அமைப்புக்குள் ஒடுக்கும் முயற்சியை அகப்பாடல்கள் பதிவாகியுள்ளன. பெண் என்பவள் மென்மையானவள் எனச் சங்கப் பனுவல்கள் சித்தரிக்க முயல்கின்றன. வீட்டிலிருந்து பிரிந்துபோன ஆணுக்காக் காத்திருத்தல் பெண்ணின் இருப்பு என்பது அகப்பாடல்களின்நுட்பமாகவெளிபட்டுள்ளது. சங்கப் பிரதிகளின் காணப்படும் பரத்தை என்பவள் தாய் வழி சமூகத்தின் எச்சமாகக் காணப்படுகிறாள். குடும்பநிறுவனத்துக்குள் இணங்கி வாழாதவள் என்ற நிலையில் பரத்தையர் காணப்படுகின்றனர். நெருங்கிய உறவினரின்

மரணத்துக்காகப் பெண் கதறியழுவது, பெண்கள் பாடியுள்ள கையறு நிலைப் பாடல்களில்கூட இடம் பெறவில்லை. அன்று உருவாகிய குடும்ப வாழ்வில் காதலைத்தவிர வேறு பல அம்சங்களும் உள்ளன. தனி உடைமை, உபரி செல்வத்திற்காக அரச உத்தரவுகளால் மேற்கொள்ளப்படும் போர்கள். ஆண்கள் பிற பெண்களை நாடிச் செல்லுதல் பெண்கள் கண்டிக்கின்றனர். அதே வேளையில் இடித்துரைப்பது போலவும் பேசுகின்றனர்.

காதலும் வீரமும்

சங்கத் தமிழரின் வாழ்க்கையானது காதலையும் வீரத்தையும் மையமாகக் கொண்டதாகும். தாய் வழிச் சமூகத்தில் பெண்களின் பாலியல் வேட்டையைக் குறித்துக் காதல், கற்பு என்று வரையறுக்கப்பட்டது. ஆனால் ஆணின் விருப்பத்தை, காதல், களவொழுக்கம், பரத்தமை ஆகியவற்றின் மூலமாகத்தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாக, பெண்ணின் புழங்குவெளி குடும்பத்திற்குள்ளும், ஆணின் புழுங்குவெளி வீரத்தின் விளை நிலமான போர்ச் சூழலிலும், பொருள் ஈட்டுதலிலும் தீர்மானிக்கப் பட்டவையாகக் காணமுடிகிறது. காதலையும் வீரத்தையும் வாழ்வியல் நெறியாகக்கொண்டு வாழ்ந்தனர்.

விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும் தன் நாளை எடுத்து

(குறள்: 776)

எனத் திருக்குறளும் போரில்லாத நாள்கள் என்றால் புண்கள் இல்லை அல்லவா? அதனால் தான் அந்த நாள்கள் அவனைப் பொறுத்த அளவில் வாழாத நாள்களாகக் கருதினான்.

அகமாந்தர்கள்

தோழி அறத்தோடு நிற்பதை இக்கூற்றின் மூலம் அறியலாம். அதையறிந்த செவிலித்தாய் அச்செய்தியை நற்றாயிடம் எடுத்துரைத்துத் தன் கணவனிடமும் மற்ற உறவினிடமும் கூறி தன் மகளை அத்தலைவனுக்கு மணம் முடித்து அந்த களவு நெறியை கற்பு நெறியாக மாற்றி அமைந்ததாக அகப்பாடலின் மூலம் இருக்கும் செய்தியை அறியலாம்.

குறிஞ்சி பாடல்களில் இல்லறம் விரும்பிய பெண். மக்கட் பேற்றில் குழந்தை வளர்ப்பு மயக்குறு மக்களை இல்லார்க்குப் பயக்குறை இல்லை பெண்மகவையும் வேண்டிப் பெற்றனர். குழந்தைப் பேறு இல்லாத மனைவி தன் கணவனுக்கு இரண்டாம் மணம் செய்து வைப்பது மரபாக இருந்துள்ளது.

ஒரு அழகான தேனீ, தாமரை மலரில் இருக்கக்கூடிய குளிர்ச்சியான மகரந்தங்களில் உட்கார்ந்து அதில் இருக்கக்கூடிய தேனை எடுக்கும். குறிப்பாக, அந்த தேனை உயரமாக இருக்கக்கூடிய சந்தன மரத்தோடுப் பாதுக்காப்பாக வைத்துக் கொள்ளும். அதே போல் தான், என் தலைவனும் நானும் கொண்டிருக்கும் உறவு தேன் போல யாரும் நெருங்க முடியாது உயரத்தில் இருக்கக் கூடியது என்பதை தலைவனின் இயல்பை எடுத்துக் கூறும் பாடலாக அமைந்துள்ளது. இதனை,

> **நின்ற சொல்லர் நீடுதோறினியர்**
> **என்றும் என்றோள் பிரிபறி யலரே**
>
> **(நற்:1)**

எனும் பாடலில், தலைவி வைத்திருக்கும் நம்பிக்கையும் உயர்வான நட்பையும் கொண்டிருப்பதை அறிந்து கொள்ளலாம்.

அறத்தொடு நிற்றல்

களவை வெளிப்படுத்துதல், களவு கற்பாக மாற்றுவதற்குத் தலைவி தோழியிடமும் தோழி, செவிலி, நற்றாய், தந்தை, தமயன் ஆகியோரிடம் சொல்வது அறத்தொடு நிற்றலாகும். குறிஞ்சிப்பாடலில் நற்றாய்க் கெனக் கூற்று கிடையாது. களவுப் பாடல் அதிகம் என்பதால் செவிலியின் இடம் அதிகம் எனினும் நற்றாய் அறத்தொடு நிற்றலில் இடம் பெற்றுகிறாள்.

காதல் செய்த ஒருவனை மணந்த இல்லறம் நிகழ்த்துதலே அறம் என்று எண்ணி அந்த அறத்தில் நிற்றலே அறத்தொடு நிற்றல் ஆகும். ஒத்த தலைவனும் தலைவியும் ஒரு சோலையில் அல்லது வேறு இடங்களில் எதிர்ப்பட்டு அன்பு வயப்படுவர். அவர்களுக்குள் காதல் மணம் நிகழும். அன்பால் ஒன்றுபட்டு இருவரும் குறியிடங்களில் கூடுவர். தலைவியின் இக்களவொழுக்கத்தால் அவளது மேனி ஒழுக்கம் முதலியன வேறுபடும். அதற்கான காரணத்தைத் தோழி அறிந்து செவிலித் தாயிடம் தலைவியின் வேறுபாட்டுக்குக் காரணம் தலைவன் மீது கொண்டிருக்கும் அன்பு என்பதை எடுத்துரைப்பாள். தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்பாள்.

அறத்தொடு நிற்கும்போது தலைவியின் குடிபிறப்புக்கும் கற்பு, நாண் முதலிய வற்றுக்கும் செவிலியின் அறிவிற்கும், தலைவன் பெருமைக்கும் தன் பாது காவலுக்கும் ஏற்ப நிற்றல் வேண்டும் இந்த வரையறைதான் தமிழரின் நாகரிகமாக சங்க நூல்கள் எடுத்துரைக்கின்றன.

வரைவு கடாதல்

தலைவனிடம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தோழி வரைவு மேற்கொள்ளக் கூறுவாள். குறிப்புப் பொருள் வழியாகத்தான் அதிகமாக வரைவு கடாதல் தூண்டப்படுகிறது. தலைவன் வரைவு நீட்டிக்கிறான். அதனால் தலைவி அடையும் வேதனையை நேராகக் கூறாமல், குறிப்புப் பொருள் மூலமாக உணர்த்துகிறாள். நற்றிணைப் பாடல் 151 ஒன்றில்,

> **நல் நுதல் பசப்பினும் பெருந் தோள் நெகிழினும்**
> **கொல் முரண் இரும் புலி அரும் புழைத் தாக்கிச்**
> **செம் மறுக் கொண்ட வெண் கோட்டு யானை**
>
> **(நற் பா:151)**

தோழி தலைவியை நோக்கி, உன் நெற்றியில் பசலை படர்ந்தாலும், பருத்த தோள் நெகிழ்ச்சியடைந்தாலும் இரவுப் பொழுதில், அவ்வழியில் தலைவன் இனிமேல் வாராது இருப்பாயினாக என்று அறிவுறுத்து மிடத்தில் தோழி, தலைவியினுடைய அச்சத்தை உணர்ந்த அவ்வச்சம் தீருவதற்கான வழிமுறையையும் நேரிடையாகக் கூறினால்,

தலைவி நாணப்படுவாள் என்று கருதி, களவில் புணர்ந்த மந்தி தன் சுற்றத்தினர் அறிந்துவிடுவார்களே என்று பயந்து, புணர்ச்சியின் போது குலைந்திருத்த மயிர்த் திருத்துதலைக் கூறி உள்ளுறையாகத் தலைவியின் அச்சம் தீரத்தலைவனை விரைந்து வரைக என்று கூறுகிறாள்.

களவு வாழ்க்கை

குறிஞ்சித்திணையில் களவு ஒழுக்கம் என்பது இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் ஆகிய நிலைகளில் நடைபெறுகின்றன. குறிஞ்சி நிலப் பெண்களின் களவு வாழ்க்கை பெண்களாலேயே வெளிப்படுத்தப் படுகின்றன.

அற உணர்வு ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிக நம்பிக்கை இருந்துள்ளதாகக் குறிஞ்சிப் பாடல்கள் தருகின்றன. பரத்தை கூற்றாக ஒரே ஒரு பாடல் மட்டுமே சங்க இலக்கியக் குறிஞ்சிப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

வெறியாட்டு என்பது பெண்களையே சார்ந்தது. அணங்கு குறிஞ்சி நிலத்தின் சிறுதெய்வ வழிபாடாகும். குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனை வழிபடுதலும், ஊழ்வினைக்காக நிமித்தம் பார்த்தல், கைம்மை மகளிர் குறித்த கருத்துகள் முதலியவையாவும் குறிஞ்சிப் பாடல்களில் இடம் பெற்றிருப்பதையும் இங்குக் குறிப்பிடலாம்.

குறிஞ்சித்திணையில் களவு ஒழுக்கம் என்பது இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் ஆகிய நிலைகளில் நடைபெறுகின்றன. குறிஞ்சி நிலப் பெண்களின் களவு வாழ்க்கை பெண்களாலேயே வெளிப்படுத்தப்படுகின்றன. பரத்தமையை குறிஞ்சி நிலத்து மக்கள் பொதுவாகவே, அங்கீகரித்துள்ளமையையும் காணமுடிகிறது.

அற உணர்வு ஆண்களை விடப் பெண்களுக்கே அதிக நம்பிக்கை இருந்துள்ளதாகக் குறிஞ்சிப் பாடல்கள் தருகின்றன. பரத்தை கூற்றாக ஒரே ஒரு பாடல் மட்டுமே சங்க இலக்கியக் குறிஞ்சிப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அழகு மற்றும்கலைத்திறமைபரத்தையைநாடியது. வெறியாட்டு என்பது பெண்களையே சார்ந்தது. பரத்தமையைக் குறிஞ்சி சமூகம் ஏற்றது. களவு வாழ்க்கை என்பது,

> **புரப்பான் போல்வது ஓர் மதுகையும் உடையன்;**
> **வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்,**
> **நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்;**
> **இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க**
> **வல்லான் போல்வது ஓர் வன்மையும் உடையன்**
>
> **(கலி : 47)**

எனும் பாடலில், தலைவன் இரப்பவன் போலக் கெஞ்சிப் பேசுகிறான். புரந்து காப்பாற்றுபவன் போலப் பெருமிதம் கொண்டுள்ளான். வல்லாரை வழிபட்டுப் பழகியவன் போல பெண்களிடமும் அடக்கம் உள்ளவனாக நடந்துகொள்கிறான். இல்லாமல் வறுமையில் வாடுவோரின் துன்பத்தை ஈகையால் தணிக்க வல்லவன் போல ஒரு திறமை உடையவனாகத் தோன்றுகிறான். இதுவே களவு வாழ்க்கையில் காணலாகும் நிகழ்வுகளாகும்.

கற்பு வாழ்க்கை

குறிஞ்சி நிலத்தலைவி களவு வாழ்க்கையிலும் கற்பு வாழ்க்கையிலும் ஆடவனுக்கும் அவனைச் சார்ந்தவர்க்கும் அன்பினையே அளித்துள்ளாள். காமம் என்ற உணர்வினைக் குறிக்க அங்கு அது இடம் பெறுகிறது. காமக்குதிரை என்பது பரத்தையைக் குறித்து வருகிற ஒரு தொடர். மற்றபடிப் பெண் மகளுக்கு இத்தகைய விலங்குகள் இணைவுகளாகவும் ஒப்புமைகளாகவும் பெண்ணின் தோற்றத்திற்கு ஈடுதருகின்றன.

சங்க இலக்கியத்தில் பெண் குழந்தைகள் பற்றிய குறிப்புகள் இல்லை. தலைவன் இல்லாத சமயத்தில் பெண்கள் அழகு படுத்திக்கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இல்லை என்பதைக் கச்சிப்பேடு நன்னாகையாரின் குறுந்தொகை 162 ஆம் பாடலில் காணமுடிகிறது.

காதல் ஒரு பெண்பாற் புலவரை காலை, மாலை, யாமம், விடியல் என எல்லாப் பொழுதும் காதலும் காமமும் வருத்திக் கொண்டிருக்கிறதாக அள்ளூர் நன்முல்லையார் பாடுகிறார் குறுந்தொகை 32, வெள்ளிவீதியாரின் 348 ஆம் பாடலில் காமம் பெரிதே களைஒரும் இலரே ஆக இந்த மூவரின் பாடலிலும் எடுத்துரைப்புத்திறன் பிரிவுத்துயரம் ஆகியவை மேலோங்கி உள்ளது. குறிஞ்சி நிலத்தலைவி கற்பு வாழ்வில் கூட்டு வாழ்வையே பின்பற்றியுள்ளமையைக் காணமுடிகிறது. காதலனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்களுக்கு இருந்திருந்தாலும் காதலைச் சொல்வதற்குத் தயக்கமும் இருந்திருக்கிறது.

ஞாயிறு காயம் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல்

(குறுந்: 58)

வெள்ளிவீதியார் ஓர் உவமையின் மூலம் விளக்குகிறார். பெண்ணின் வெளி வீடு, கற்பு பேணப்பட்டது. பரத்தையரிடம் சென்று வந்த கணவனை முகமலர்ச்சியோடு வரவேற்பது பொன்முடியாரின் பாடலில் விளக்கப்படுகிறது. தன் அழகின் மீது தானே வியந்து போற்றல் தன்னை வியத்தல் எந்த விதப் பூச்சும் இல்லாமல் மிகவும் சிறப்பாகப் பாடியுள்ளார்கள்.

மகளிரின் துணிவு

கற்புக்கு தீங்கு ஏற்படும் திருமணங்களில் வீர தீரத்தோடு பெண்களில் செயல் பட்டுள்ளனர் என்பதை கலித்தொகை 65 ஆம் பாடலில் காணலாம்.

முது பார்ப்பான் அஞ்சினன் ஆதல் அறிந்து, யான், எஞ்சாது
ஒரு கை மணல் கொண்டு, மேல் தூவக் கண்டே
கடிது அரற்றிப் பூசல் தொடங்கினன், ஆங்கே

(கலி:65)

எனும் பாடலில், தலைவி வீரத்தோடு செயல்பட்டதை தோழியிடம் கூறுவதாக அமைந்ததைக் காணமுடிகிறது.

சமுதாயப் பின்னணியில் குறிஞ்சி மகளிர்

கைம்மை மகளிர் குறித்த கருத்துகள் அவ்வளவாகக் குறிஞ்சிப்பாடல்களில் இடம் பெறவில்லை. குறிஞ்சி நிலத்தில் கலைமகளிர், இயல், இசை, கூத்து, ஆடல், பாடல் முதலான கலைகளைப் பரவச் செய்தனர் என்பதை அறியமுடிகிறது. நிமித்தம் பார்த்தல், கழங்கிட்டுப் பார்த்தல், வெறியாட்டு நிகழ்த்துதல், குறி சொல்லுதல் முதலான சடங்குகளில் பெண்கள் ஈடுபாடு காட்டியுள்ளனர். மேலும், பேய் நம்பிக்கை, போய் ஒட்ட நிகழ்வு, அறம், மறுமை, ஊழ், கனவு பற்றிய நம்பிக்கை, ஆகியன ஆட வரைவிட மகளிர்க்கே அதிக ஈடுபாடு இருந்துள்ளதைக் காணமுடிகிறது.

தலைவியின் மனவியல்

சங்கப்பாடல்களில் இடம்பெற்றிருக்கும் பாத்திரங்களின் மன உணர்வுகள் அப்படியே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. அவ்வகையில், குறிஞ்சித் திணைப் பாடல்களில் தலைவன் மற்றும் தலைவியின் மனநிலையை அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஓர் அழகான இளம் பெண்ணை அப்பொழுது தான் பார்க்கிறான் தலைவன். அவளை பார்த்த மாத்திரத்தில் அவளது அழகில் மயங்குகிறான். கொல்லிப்பாவை போன்ற பெண்ணே! கூற்றுவனாக வந்து ஆடவர்களைத் துன்புறுத்துவதற்காகவே இந்த வடிவம் எடுத்துள்ளாயா? மான்

போன்ற உன் பார்வையும், மயில் போன்ற உன் சாயலும் மென்மையான உன் தோள்களும் கண்டவர்களை வருத்தும் என்பது உனக்குத் தெரியாதா? என்று கேட்கிறான். அதற்கு மறுமொழியாக அப்பெண் எதனையும் கூறாமலும் அந்த இளைஞனை விரும்புவது போன்ற எதையும் வெளிக்காட்டக் கொள்ளவில்லை. இதனால் மிகவும் வியப்படைந்த தலைவன் (அவன்) பெண்ணே! உன் மீதும் தவறில்லை உன்னை உலவ விட்ட உன் சுற்றத்தார் மீதும் தவறில்லை. மதம் கொண்ட யானை நீர்த் துறைக்கு வருகிறது என்பதை பறையறைந்து எச்சரிக்கை செய்யாத அரசனே தவறுடையவன் என்று புலம்புகிறான். இதனை,

நீயும் தவறில்லை; நின்னைப் புறங்கடைப்
போதரவிட்ட நுமரும் தவறிலர்
நிறை அழி கொல் யானை நீர்க்கு விட்டாங்கு
பறை அறைந்தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடையான்

(குறி.கலி:20)

எனும் குறிஞ்சிக் கலிப்பாடல் மூலம் அறியலாம்.

தலைவியின் பேரச்சம்

சங்க இலக்கிய மரபில் காதல் வயப்பட்டு உள்ளத்தால் ஒருங்கிணைந்து ஆணும் பெண்ணும் மிகவும் ஆர்வத்துடன் இருவரும் புணர்தலில் ஈடுபட்டுவிடுகின்றனர். ஏதோ ஒரு காரணத்திற்காகப் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டபொழுது தலைவி மிகுந்த அச்சம் கொள்கிறாள்.

"நின்னைப் பிரியேன்" பிரியின் உயிர் தரியேன் என்று ஊரார் முன்னும் தெய்வத்தின் மீதும் ஆணையிட்டுஉறுதிமொழிகூறியபின் இருவரும் இணைந்து மகிழ்ந்திருந்தனர். பிறகு வந்து மணமுடிப்பதாகக் கூறிவிட்டும் சென்ற தலைவன் திரும்பிவரவே இல்லை. பிரிவுத் துயரால் தலைவியின் உடல் வேறுபாடு கொள்கிறது. அவரது ஒளிபடர்ந்த நெற்றியில் பசலை படர்கிறது. மென்மையான தோள்கள் நெகிழ்கிறது. இந்த மாற்றங்களை ஊராரும்அறிய முடிகின்றது. இந்தநிலையில் தான் தலைவி பேரச்சம் கொள்கிறாள். எதற்காக இந்த அச்சம் கொள்கிறாள் என்பதை பின்வரும் கபிலரின் குறிஞ்சிப்பாடல் விளக்குகிறது.

மன்ற மராஅத்து பேஎழுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதும்
கொடிய ரல்ல ரெங் குன்று கெழு நாடர்
பசைஇப் பசந்தன்ரு நுதலே ஞெகிழ
ஞெகிழ்ந்தன்று தடமென்றோளே!

(குறுந்:87)

எனும் பாடலில், தலைவியின் பேரச்சமானது, துன்பம் மிகுதியால் அல்ல. உடல் வேறு பாட்டாலோ ஊரார் அலர் தூற்றுவாரே என்பதற்காகவும் அல்ல. இயற்கைப் புணர்ச்சியின் போது தலைவன் தெய்வத்தின் மீது ஆணையிட்டதே அவளைப் பெரிதும் வாட்டுகிறதாம். ஏனெனில், அத்தெய்வம் ஆற்றல் மிக்கும் கொடிய வரையும் பொய்யுரைப்பாரையும் தண்டிக்கக்கூடியது. அதனால், தலைவனுக்கு ஏதேனும் துன்பம் நேருமோ என்று அஞ்சுவதாகப் பாடலில் காரணம் கூறப்படுகிறது. அன்பின் மிகுதியால் தன் துன்பத்தை மறந்து தலைவன் குற்றத்தை மறைத்து தெய்வத்தின் தண்டனை தலைவனை ஒன்றும் தண்டிக்காமல் இருக்க வேண்டும் குறிஞ்சி நிலத்தலைவியின் காதலில் மாட்சிமையைக் காணமுடிகிறது.

மை தீட்டிய பெண் பொய் பேசார் குடும்பம் என்ற சமூகநிலை உருவாக்கத்தில் பெண் முதன்மைப் படுத்தப்படுகிறாள்.

பெண்ணுக்கு சமூக மதிப்பீடும் இருந்துள்ளது. காதல் மொழியைக் காதலன் பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் காதலி பேசக்கூடாது. தாய்மை, பெண்மை, ஆண் குழந்தையைப் பெற்றுத் தருதல் இது போன்ற கட்டமைப்பு இரண்டாம் நிலையில் வைக்கப்பட்டது எனலாம்.

தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்
எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை

(தொல்பொருள் களவியல்:116)

எனும் நூற்பாவும்,

தற்புகழ் கிளவி கிழவன் முன் கிளத்தல்
எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை
(தொல்பொருள் களவியல்: 78)

ஆகிய தொல்காப்பிய நூற்பாக்களில் வரும் அக இலக்கண மரபில் காதலன் முன் அவனைப் புகழ்ந்து பேசுதலும் காதலிக்கு உரிமை இல்லை என்பதைக் காணமுடிகிறது.

குறிஞ்சி நிலத்துத்தலைவி ஒருத்தி, ஒரு நாள் தனது தோழியர் காதலுடன் மலர்கள் நிறைந்த மலைச்சாரலில் மலர் கொய்யச் சென்றாள். அப்படிச் சென்றவள், உயர்ந்து வளர்ந்த தழைத்த இலைகளையுடைய வேங்கையின் மலர்களைக் கண்டு, அவற்றைக்கொய்யவிரும்புகிறாள். ஆனால், அம்மலரைப் பறிக்க அவளால் மரத்தின் மீது ஏற இயலவில்லை. அதே வேளையில் வேங்கை மலரின், ஆவல், அவளை அதிகமாகத் தூண்டின. அவ்வேளையில், அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. உடனே, அச்சம் கொண்டவள் போல "புலி புலி" என்று மிகவும் உரத்த குரல் எழுப்பினாள். அவளது குரலைக் கேட்ட கானவன் ஒருவன் கையில் வில்லும் கணையும் கொண்டு விரைந்து வந்து எங்கே புலி என்றும், அந்தப் புலி எந்த வழியில் சென்றது என்றும் கேட்டான். அவளோ, வேங்கை மரத்தில் உள்ள பூக்களைச் சுட்டிக் காட்டியபடி, மிகவும் நாணப்பட்டு நின்றாள்.

அவள் வேங்கை மலரைப்பறிப்பதற்காகத்தான் பொய் கூறியுள்ளாள் என்பதை உணர்ந்து கொண்ட அவன், "நீங்களும் பொய் பேசுவீர்களோ" என்று கூறியபடி, வேங்கை மரத்தின் கிளையை வளைத்துக் கொடுத்து பூக்களைக் கொய்யச் செய்தான். இந்நிலையில் அவன் மறைந்திடும் திசையை நோக்கியே நின்ற தோழியே! "இவன் ஓர் ஆடவன்" என்று ஒன்றும் அறியாதவள் போலக் கூறினாள். மையுண்ட உன் மகளின் கண்கள் அவனை நோக்குங் கால். தான் நோக்காமல் இருந்தும், அவள் நோக்காமல் நிலத்தை நோக்குங்கால் தான் நோக்கியும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பல முறை நோக்கியதால் மலர் கொய்யச் சென்று உன் மகளின் மனம் கொய்து சென்றுவிட்டான் அந்த இளைஞர் என்பதாகக் குறிப்பிடும் தோழியின் கூற்றாக அமைந்த பாடல்,

மலி பூஞ்சாரல், என் தோழியரோடு
ஒலிசினை, வேங்கை கொய்குவம் சென்றுழி
மை ஈர் ஓதி மடவீர்! நும் வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன்
(அகம்:48 5-9)

எனும் பாடலில், மைபூசிய மகளிர் பொய்யை பேச மாட்டார்கள் என்ற தலைவியின் உயர்ந்த பண்பு இங்குச் சுட்டப்படுவதை அறியலாம்.

முடிவுரை

தலைவனின் கூற்றில் தலைவியின் பிரிவுத் துன்பத்தைப் பாடியுள்ள தன்மை சிறப்புக்குரியதாகும். தலைவியின் நலன் அழிவிற்குத் தலைவனது பிரிவே காரணமாகச் சுட்டப்பட்டுள்ளது. தோழி கூற்றுப் பாடல்கள் வரைவுகடாதலை வலியுறுத்துவனவாக உள்ளன.

தலைவன், தலைவி பெரும்பாலும் களவு வாழ்க்கையை மலைகளில் நிகழ்த்தி வாழ்ந்து வந்தனர். அதில் இரு வகையாகப் பிரித்து களவு மற்றும் கற்பு எனப்பட்டன. இவற்றை அகநானூற்றிலும், நற்றிணையிலும், பெரும்பாலும் கலித்தொகையிலும் குறிப்பிடுவதைக் காணலாம். களவு என்பது யாருக்கும் தெரியாமல் இருக்கும் நிகழ்வு, அதே போல் கற்பு என்பது ஊரறிய நிகழ்த்தும் ஒன்றாகும். இதில் தோழியின் பாங்கும், செவிலியின் பாங்கும் அறத்தோடு நிற்றலைக் கலித்தொகை விரிவாக எடுத்துரைப்பதைக் காணலாம்.

தொல்காப்பிய அகத்திணையியலில் சிறிது விரித்தும் மாற்றியும் குறிஞ்சி பற்றிய செய்தி அழகுறவும் விளக்கப்பட்டுள்ளது. இலக்கண நூல்கள் குறிப்பிடுவது போல்,

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முப்பொருளையும் வகைப்படுத்தியுள்ளது.

குறிஞ்சித் திணையில் அகத்திணையில் பதிவாகியுள்ள பெண்ணின் பிரிவுத் துயரம் இரங்கலும் ஏக்கமும் குடும்பம் என்னும் அமைப்பினுள் வரலாற்றுரீதியாக முதல் முதலாக அமைக்கப்பட்ட தமிழ்ச்சியான பெண் துயரத்தின் முதல் பதிவுகள் எனக் சொன்னால் மிகையாகாது.

துணைநூற் பட்டியல்

1. ச.வே.சுப்பிரமணியன் (ப-ஆ), சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2006.
2. பரிமேலழகர் (ப-ஆ), திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு.
3. சீனிவாசன், ரா. புறநானூறு செய்யுளும் செய்திகளும். அணியகம் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 2000.
4. திருஞானசம்பந்தம், ச.தொல்காப்பியம் பொருளதிகாரம். கதிர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு.
5. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, நற்றிணை, சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2003.